## தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்ததாகவும்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தீர்வு செய்வதன் மூலம் அறவிட்டு திறைசேரிக்கு அனுப்பியிருந்த ரூபா 840,254 தொகை கட்டுநிதிக் கணக்கின் மூலம் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டில் திறைசேரியிடமிருந்து நேரடியாக கிடைத்த கட்டுநிதியிலிருந்து கழிக்கப்பட்ட முற்பணங்களிலிருந்து கழித்து நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரமாக நிதிச் செயலாற்றல் கூற்றின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 840,254 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ACA 3 மாதிரியிலும் கட்டுநிதி பெறுவனவுகளில் இவ்வேறுபாடு காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தீர்வு செய்வதன் மூலம் அறவிட்டு திறைசேரிக்கு அனுப்பியிருந்த ரூபா 840,254 தொகை கட்டுநிதிக் கணக்கின் மூலம் சீராக்கம் செய்யப்பட வேண்டும். ஆண்டில் திறைசேரியிடமிருந்து நேரடியாக கிடைத்த கட்டுநிதியிலிருந்து கழிக்கப்பட்ட மொத்த கட்டுநிதி அளவை நிதிச் செயலாற்றல் கூற்றில் ACA 3 மாதிரியில் காண்பிக்கப்பட வேண்டும். | அறிக்கையிலுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றுக்களில் காணப்பட்ட வாகனங்களின் மீதி ரூபா 21,613,804 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் ACA 6 மாதிரியில் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு மீதியாக ரூபா 22,756,900 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தலொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆரம்ப மீதியில் இடம்பெற்ற திருத்தங்களை வெளிப்படுத்த வேண்டும். | முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றுக்களில் காணப்பட்ட வாகனங்களின் மீதி ரூபா 21,613,804 என தவறாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் பின்னர் கணக்காய்வு விசாரணை மூலம் அம்மீதி ரூபா 22,756,900 ஆக இருக்க வேண்டுமென வெளிப்படுத்தப்பட்டது. 2019 இன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆரம்ப மீதியில் இடம்பெற்ற இத்திருத்தத்தை வெளிப்படுத்த முடியாதிருந்தது. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் கணனி அச்சீட்டின் பிரகாரமும் திணைக்களப் பதிவேடுகளின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு மீதியான ரூபா 17,282,790 காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 14,945,142 என காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி கட்டுநிதி பெறுவனவு சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். | அறிக்கையிலுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் ACA 2(ii) மாதிரியின் தனிப்பட்ட படிகள் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 14,048,498 ஆக இருந்ததுடன் உதவிகள் மற்றும் மாற்றங்கள் ரூபா 78,640 ஆக இருந்தது. எனினும் மேற்படி இரண்டு செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 14,127,138 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினமாக காட்டப்பட வேண்டும். | அறிக்கையிலுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். |

குறித்த ACA - C மாதிரியில் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவு | பதில் நியமனமொன்று, நிரந்தரமான நியமானமொன்று மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக அடிப்படையொன்றில் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவிக்காக 2020 யூன் 10 ஆந் திகதி வரை நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | றிக்கையிலுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட | 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் | 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| விளைவுகளினைப் பெற்றுக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர், மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாக கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட்ட செயற்பாட்டுத் திட்டம் மற்றும் கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் போன்றவை உட்படுத்தப்படாமையால் அச்செயல் நடவடிக்கைத் திட்டம் மேற்படி சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | பிரகாரம் எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதாக அறிய தருகின்றேன். |

**2.2 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நீதி அமைச்சினால் மாற்றஞ்செய்யப்பட்ட 03 மோட்டார் வாகனங்களின் உரிமையை 2020 யூலை 10 வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள இவ் வாகனங்களின் உரித்தை முறையாக கையேற்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | WP KP 1092, WPKP 1094 மற்றும் WPKP 1107 ஆம் இலக்க 03 மோட்டார் வாகனங்களின் உரித்தினை இத்திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டு வருகின்றன. |

**2.3 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேணடிய 02 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. மனித வள முகாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் பதவியணியன் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 29 ஆக இருந்த போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 18 ஆக இருந்தமையால் மொத்த பதவியணியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்தது | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படும் மனித வளங்களை ஆகக்கூடிய செயலாற்றலுடன் ஈடுபடுத்தி கடமைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. |